**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.360/2021**
**Prosecution Witness :5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மகேஷ் | **Caste** | : |
| **Father's Name** | : ஜெயராமன் | **Calling** | : காவல் ஆய்வாளர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : தேனி | **Age** | : **44/2026** |
| | | **Dated** | : **09.03.2026** |

**09.03.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 6 **திரு. மகேஷ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 5** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2ம் எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணையின் தொடர்ச்சி</u>**

04.10.2018ம் தேதி கனம் நீதித்துறை நடுவர் எண்.II, Crlmp.No.7470/2018 கீழ் உத்தரவு பெற்று வழக்குச்சொத்துகளை தீயிட்டு அழிப்பு செய்தேன். **அழிப்பு செய்தத்ற்கான புகைப்படம் அ.சா.ஆ.16 ஆக குறீயீடு செய்யப்படுகிறது.** பின்பு எனது புலன்விசாரணையை முடித்து 30.09.2018ம் தேதி எதிரிகள் மீது சட்டப்பிரிவு 77 JJ ACT மற்றும் 24(1) , 6(A) COTPA ACT ன் படி குற்றஇறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்குச்சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார்கள் என்று என் குற்றஇறுதிஅறிக்கையில் சொல்லவில்லை என்றால் suo moto வாக வழக்கு பதிவு செய்தேன். எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து சம்பவம் நடைபெற்றது என்று எனது குற்றஇறுதிஅறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிட்டுள்ளேன். எத்தனை மணிக்கு சம்பவம் கேள்விப்பட்டு சென்றோம் என்றால் 14.00 மணிக்கு சென்றோம். சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடம் என்றால் சரிதான். சம்பவஇடத்தின் அருகில் CCTV கேமிராக்கள் உள்ளதா என்றால் சம்பவத்தின் போது அங்கு இல்லை. சம்பவ நாள் அன்று பள்ளி நடைபெற்றதா அல்லது விடுமுறையா என்றால் பள்ளி நடைபெற்றது. சம்ப நாளான 18.08.2018ம் தேதி வாஜ்பாய் இறந்ததால் அவரது உடல் தகனத்திற்காக பள்ளிகள் அனைத்தும் விடுமுறை விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் சம்பவ இடத்தின் அருகே பள்ளி ஹாஸ்டல் இருப்பதால் மாணவர்கள் இருப்பார்கள். . **என்னிடம் காட்டப்படும் ஆவணம் 18.08.2018ம் தேதி விடுமுறை அறிவிக்கப்பட்டு தினந்தந்தி நாளிதழில் வெளியிட்ட செய்தித்தாள் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட வழக்குச்சொத்துகள் எங்கெங்கு இருந்து கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிட் சொல்லவில்லை என்றால் அத்தாட்சியில் குறிப்பிட்டுள்ளது. அத்தாட்சியில் குறிப்பிட்டுள்ள வழக்குச்சொத்து எடைக்கும் நீதிமன்ற crlmp 7470/2018 ல் குறிப்பிட்டுள்ள வழக்குச்சொத்து எடைக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை எங்கு வைத்து கைது செய்தும் காவல்நிலையத்திற்கு அழைத்துவந்ததை இறுதிஅறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகள் என்ன தொழில் செய்கிறார்கள், மொபைல் எண் ஏதும் குற்றஇறுதிஅறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் மாதிரி வரைபடம் போன்றவை தயார் செய்யவில்லை என்றால் suo moto என்பதா்ல் தயார் செய்யவில்லை. எனது உயர் அதிகாரியின் அழுத்தத்தின் பெயரில் எதிரிகள் மீது தவறாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி சம்பவ தேதி அவரது காரை ஸ்ரீ லக்சண்யா கார் சர்வீஸ் செய்து மேற்கு தாலுகா அலுவலகத்தில் பட்டா மாறுதலுக்காக காத்துக்கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. **என்னிடம் காட்டப்படும் எதிரி அவரது காரை ஸ்ரீ லக்சண்யா கார் சர்வீஸ் செய்த ரசீது எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்த அன்று வழக்குச்சொத்துகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை சாட்சியாக கையொப்பம் செய்ய அழைத்து அவர்கள் மீது தவறாக வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

பட்டியல் சாட்சிகள் அனைவரும் என் கீழ் பணியாற்றுபவர்கள் என்பதன் காரணமாக எதிரிகள் மீது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிகள் மீது எந்தவொரு முகாந்தரமும் இல்லாமல் தவறாக வழக்கு பதிவுசெய்யப்பட்டு குற்றஇறுதிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குச்சொத்துகளை அழிப்பதற்கான முறைப்படி சம்மன் ஏதும் எதிரிகளுக்கு அளிக்கப்படவில்லை என்றாலும் அது தொடர்பான விவரங்களை நீதிமன்றத்தில் அளிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.09 13:52:15 +0530

Judicial Magistrate No.II
Dindigul.